


City of Casey

# மழலையர் பள்ளி

## மையப் பதிவு மற்றும் சேர்க்கை திட்டம்

CASEY.VIC.GOV.AU

Tamil

# கேசி நகராட்சியிலிருக்கும் மழலையர் பள்ளிக்கு வரவேற்கிறோம்

உங்கள் குழந்தையை மழலையர் பள்ளியில் சேர்ப்பதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது குறித்த தகவல்கள் இந்தக் கையேட்டில் உள்ளன. விண்ணப்பிப்பது இலவசம், உங்களுக்குத் தேவையானது ஒரு செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரி மட்டுமே.

மழலையர் பள்ளியில் சேர்வதற்கு குழந்தைகள் ஆஸ்திரேலிய குடியுரிமை கொண்டவராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**9705 5200**

**kinderenrolment@casey.vic.gov.au**

கேசி நகராட்சி அதன் பாரம்பரிய உரிமையாளர்கள், கேசி பழங்குடி சமூகங்களையும் அவர்களின் செழுமையான கலாச்சாரத்தையும் பெருமையுடன் ஏற்றுக்கொள்வதோடு, அவர்களின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால மூத்த குடிகளுக்கும் மரியாதை செலுத்துகிறது.

பழங்குடி மக்களை ஆஸ்திரேலியாவின் முதல் குடிமக்களாகவும், நாங்கள் பணிபுரியும் மற்றும் வாழும் நிலத்தின் பாரம்பரிய உரிமையாளர்களாகவும் மற்றும் பொறுப்பாளர்களாகவும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

Interpreter

**TIS:** 131450 (Translating and Interpreting Service)

المترجم الفوري 翻译 مترجم شفاهی ਦੁਭਾਸ਼ੀਆ භාෂා පරිවර්තක

# இலவச
# மழலையர் பள்ளி

3 மற்றும் 4 வயது குழந்தைகள் வாரத்திற்கு 15 மணி நேரம் நிதியுதவியுடன் கூடிய மழலையர் பள்ளிக் கல்வியைப் பெறலாம்.

மழலையர் பள்ளி என்பது சிறு குழந்தைகளுக்கு ஒரு முக்கியமான படியாகும், மேலும் இது பாடசாலையில் எளிதாக நுழைவதற்கு ஆதரவளிக்கிறது.



# எப்பொழுது என் குழந்தை மழலையர் பள்ளிக்குச் செல்லத் தொடங்கும்?

## உங்கள் குழந்தை மழலையர் பள்ளியில் சேர்வதற்கு அவர்கள் 3 வயதை அடைந்திருக்க வேண்டும்.

**ஜனவரிக்கும் ஏப்ரலுக்கும் இடையில் பிறந்த குழந்தைகள், பின்வருமாறு தொடங்கலாம்:**




**3 அல்லது 4 வயதை அடையும் ஆண்டில் அவர்கள் 3- வயது மழலையர் பள்ளி**




**4 அல்லது 5 வயதை அடையும் ஆண்டில் அவர்கள் 4- வயது மழலையர் பள்ளி**

# மையப் பதிவு மற்றும் சேர்க்கைத் திட்டத்தின் கீழ் உள்ள மழலையர் பள்ளிகள் அமர்வு

கேசி நகராட்சியின் CRES ஆனது, மன்றத்தால் நிர்வகிக்கப்படும் அல்லது சுயாதீனமாக நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளி அமர்வு திட்டத்தில் சேர்வதற்கான தங்களது விருப்பத்தைத் தெரிவிக்க, குடும்பங்களுக்கு ஒரு வழி வகை செய்யும் நுழைவினை வழங்குகிறது.

உங்களுக்கு அருகிலுள்ள மழலையர் பள்ளியைக் கண்டறிய, கேசி நகராட்சி இணையதளத்தில் உள்ள மழலையர் பள்ளியைக் கண்டுபிடி பக்கத்திற்குச் செல்லவும் அல்லது கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**ஸ்கேன் செய்க**

**உங்களுக்கு அருகிலுள்ள மழலையர் பள்ளியைக் கண்டறிய.**





# பதிவு மற்றும் சேர்க்கை செயல்முறை

**படி 1**

### விருப்பம் தெரிவிக்கும் நிலை

அடுத்த ஆண்டுக்கான காலம் **பிப்ரவரி முதல் மே** வரை திறக்கும் .

**படி 2**

### பதிவு செய்யும் நிலை

**ஜூன்** மாதம் தொடங்குகிறது

**படி 3**

### வழங்கும் கட்டம்

**ஆகஸ்ட்** மாதம் தொடங்குகிறது

**படி 4**

### சேர்க்கைக் கட்டம்

**அக்டோபர் முதல் டிசம்பர்** வரை

**படி 5**

### அறிமுக நிலை

**ஜனவரி பிற்பகுதி**

**படி 6**

### மழலையர் பள்ளி ஆண்டு தொடங்குகிறது



படி
1

# விருப்பம் தெரிவிக்கும் நிலை

இந்தக் கட்டத்தில் மழலையர் பள்ளியில் உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துவதன் மூலம், மழலையர் பள்ளி கால அட்டவணை கிடைக்கும்போது அது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, பதிவைச் சமர்ப்பிக்கவும் நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

இந்தக் கட்டம் பிப்ரவரி முதல் மே வரை திறந்திருக்கும். விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்காத குடும்பங்கள்கூட, மழலையர் பள்ளிக்குத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

QR குறியீட்டைப் பயன்படுத்தி இலகுவாக படிவத்தை நிரப்பவும் அல்லது கேசியின் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

**ஸ்கேன் செய்க**
**கேசி நகராட்சிக்கான விருப்பம் தெரிவிக்கும் படிவம்**

படி
2

# பதிவு செய்யும் நிலை

பதிவு செய்யும் படிநிலையில், குடும்பங்கள் தங்களுக்கு விருப்பமான மழலையர் பள்ளி அமைவிடம், குழு மற்றும் அமர்வு நேரங்களைத் தேர்வு செய்துகொள்ளலாம்.

பதிவைச் சமர்ப்பிக்கும்போது, ஒரே மழலையர் பள்ளியில் பல அமர்வுகளையோ அல்லது வெவ்வேறு மழலையர் பள்ளிகளில் பல அமர்வுகளையோ நீங்கள் பட்டியலிடலாம்.

அடுத்த ஆண்டுக்கான பதிவுகள் ஜூன் மாதம் தொடங்கும்

நடப்பு ஆண்டிற்குப் பதிவு செய்ய விரும்பும் குடும்பங்கள் அக்டோபர் மாதம் வரை அவ்வாறு செய்யலாம்.

QR குறியீட்டைப் பயன்படுத்தி படிவத்தை நிரப்பினால் போதும், உங்கள் குழந்தை காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்படுவார்.

**ஸ்கேன் செய்க**

**கேசி நகராட்சி மழலையர் பள்ளி பதிவு படிவத்திற்கு**



படி 3

# வழங்கும் கட்டம்

உங்கள் குழந்தை ஆரம்பிக்க இருக்கும் ஆண்டிற்கு முந்தைய ஆண்டான ஆகஸ்ட் மாதத்தில், மழலையர் பள்ளி இடங்களை நாங்கள் வழங்கத் தொடங்குகிறோம்.

ஒவ்வொரு குடும்பத்தின் சூழ்நிலைகளின் அடிப்படையில் பதிவுகளுக்கு மதிப்பெண் வழங்கப்படுகிறது.

இடங்கள் பின்வரும் வரிசைப்படி ஒதுக்கப்படுகின்றன:

1. கல்வித் திணைக்களத்தின் முன்னுரிமை அணுகல் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் குழந்தைகள்.
2. கேசி நகராட்சியின் உள்ளூர் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் குழந்தைகள்.
3. கேசி நகராட்சியின் உள்ளூர் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத குழந்தைகள்.

குடும்பங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும், மேலும் அவர்கள் அந்த வழங்கலை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். வழங்கலைப் பெறாத குடும்பங்களுக்கும் அறிவிக்கப்படும்.

மழலையர் பள்ளி ஆண்டு உட்பட, இட வழங்கல்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன.






படி 4

# சேர்க்கைக் கட்டம்

## நகராட்சி மன்றத்தால் நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளிகள்

நகராட்சி முகாமைத்துவப்படுத்தும் மழலையர் பள்ளிகளில் சேர்க்கப்படும் குழந்தைகள், தங்கள் குழந்தை மழலையர் பள்ளியை ஆரம்பிப்பதற்கு முன்பாக, குழந்தை சேர்க்கைப் பதிவேடு மற்றும் மழலையர் பள்ளி நிதி பிரகடனப்படிவம் ஆகியவற்றை பூர்த்தி செய்ய வேண்டும்.

## சுயாதீனமாக நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளிகள்

சுயாதீனமாக நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளை, சேர்க்கை செயல்முறை குறித்து கலந்துரையாடுவதற்கு மழலையர் பள்ளி சேவை வழங்குநர் நேரடியாகத் தொடர்புகொள்வார்.

படி 5

படி 6

# அறிமுக மற்றும் மழலையர் பள்ளி ஆரம்பித்தல்

## நகராட்சி மன்றத்தால் நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளிகள்

குடும்பங்கள் அறிமுக அமர்வில் பதிவு செய்துகொள்ள அழைக்கப்படுவார்கள். இந்த அறிமுக அமர்வுகள் மழலையர் பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும்.

## சுயாதீனமாக நிர்வகிக்கப்படும் மழலையர் பள்ளிகள்

அறிமுகச் செயல்முறை குறித்து கலந்தாலோசிப்பதற்கு, சேவை வழங்குநர் குடும்பத்தினரை நேரடியாகத் தொடர்புகொள்வார்.



## ஆரம்பக்கட்ட மழலையர் பள்ளி (ESK)

தகுதியுள்ள 3 வயதுக் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 15 மணிநேர மழலையர் பள்ளிக் கல்வியை ஆரம்பக்கட்ட மழலையர் பள்ளி வழங்குகிறது.

தகுதிபெறும் குழந்தைகள் உள்ளடங்கலாக:

- குழந்தை, பெற்றோர் அல்லது பாதுகாவலர் பழங்குடியினர் அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசி வம்சாவளியைச் சேர்ந்தவராக இருந்தால்.
- உங்கள் குடும்பம் குழந்தைப் பாதுகாப்பு சேவையை கொண்டிருந்தாலோ அல்லது வீட்டு பராமரிப்புக்கு வெளியேயோ, இது நெருங்கிய உறவுமுறை பராமரிப்பு உட்பட.
- குழந்தை, பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் பின்வரும் விசாக்களில் ஒன்று இருந்தால்:
  - இமி (Immi) அட்டை.
  - அகதி அல்லது புகலிடக் கோரிக்கையாளர் விசா (200, 201, 202, 203, 204, 449, 785, 786, 790, 851 அல்லது 866).
  - மேற்கண்ட அகதி அல்லது புகலிடக் கோரிக்கையாளர் ஏதேனும் மேலே குறிப்பிட்ட விசாக்களில் ஒன்றுக்கான இணைப்பு(பிரிட்ஜிங்) விசாவை கொண்டிருத்தல்.

## 4- வயது முன்- ஆயத்த - மழலையர் பள்ளி

2026-ஆம் ஆண்டு முதல், சில முன்னுரிமையைப் பெறும் குழந்தைகள் முன் ஆயத்த நிகழ்ச்சியில் சேரலாம். இந்தக் குழந்தைகள் ஒவ்வொரு வாரமும் 16 முதல் 25 மணித்தியாலங்கள் வரை 4 வயது மழலையர் பள்ளியில் கலந்துகொள்ளலாம்.

யாரெல்லாம் தகுதி பெறக்கூடிய குழந்தைகள்:

- பழங்குடியினர் அல்லது டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசியாக இருத்தல்.
- அகதி அல்லது புகலிடக் கோரிக்கையாளர் பின்னணியைச் சேர்ந்தவராக இருத்தல்.
- தற்போதோ அல்லது கடந்த காலத்திலோ குழந்தை பாதுகாப்பு சேவையுடன் கொண்டிருந்திருத்தல்.
- மூன்று வயதுக் குழந்தைகளுக்கான ஆரம்பக்கட்ட மழலையர் பள்ளி (ESK) அல்லது ஆரம்பக்கட்ட கற்றலுக்கான அணுகல் (AEL) திட்டத்தில் சேர்ந்த குழந்தைகள்.

2028 முதல், காமன்வெல்த் அரசாங்க சலுகை அட்டை வைத்திருக்கும் குழந்தைகள்/குடும்பங்கள் அல்லது பன்முறைப் பிறப்பு (மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள்) ஆகியோரையும் உள்ளடக்கும் வகையில் முன் ஆயத்த மணித்தியாலயங்கள் விரிவுபடுத்தப்படும்.



N
0 1 2 3 4 5 km
SCALE: 1:75,000
விளக்கக் குறிப்பு
நகராட்சியால் நடத்தப்படும் மழலையர் பள்ளி
நகராட்சியால் நடத்தப்படாத மழலையர் பள்ளி
2027-ல் மழலையர் பள்ளி திறப்பு
DANDENONG NORTH
LYSTERFIELD
HEATHERTON ROAD
ENDEAVOUR HILLS
DANDENONG
DOVETON
EUMEMMERRING
PRINCES HIGHWAY
NARRE WARREN NORTH
BELGRAVE - HALLAM ROAD
MONASH FREEWAY
NARRE WARREN NORTH ROAD
HALLAM
HALLAM SOUTH ROAD
SOUTH GIPPSLAND FREEWAY
GREENS ROAD
NARRE WARREN
CASEY
GUYS HILL
BEACONSFIELD - EMERALD ROAD
POUND ROAD
SHRIVES ROAD
PRINCES HIGHWAY
DANDENONG SOUTH
HAMPTON PARK
BERWICK
HIGH STREET
BEACONSFIELD
OLD PRINCES HIGHWAY
PRINCES FREEWAY
CRANBOURNE ROAD
HALLAM ROAD
NARRE WARREN SOUTH
DANDENONG - HASTINGS ROAD
LYNBROOK
CLYDE ROAD
SOUTH GIPPSLAND HIGHWAY
LYNDHURST
OFFICER
CRANBOURNE NORTH
NARRE WARREN ROAD
SANDHURST
CLYDE NORTH
OFFICER SOUTH
THOMPSONS ROAD
CRANBOURNE WEST
SKYE
BERWICK - CRANBOURNE ROAD
SLADEN STREET
CRANBOURNE EAST
CRANBOURNE
CRANBOURNE - FRANKSTON ROAD
CARDINIA
FIVE WAYS ROAD
BALLARTO ROAD
BOTANIC RIDGE
JUNCTION VILLAGE
CLYDE
PEARCEDALE
DEVON MEADOWS
BLIND BIGHT
TOORADIN
1 2 3 4 5 7 8 9 10 11 12 14 15 16 17 18 19 20 21 22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34 35 36 37 38 39 40 41 42 43 44 45 46 47 48 49 50 51 52 53 54 55 56 57 58 59 60 61 62 63 64 65 66 67

City of Casey

# மழலையர் பள்ளிகளின் வரைபடம்

**ஜனவரி 2026**

**Bunjil Place**
P.O. BOX 1000
Narre Warren VIC 3805
Tel: (03) 9705 5200
Fax: (03) 9704 9544
caseycc@casey.vic.gov.au
Date: 28/01/2026

இந்த வரைபடம் கேசி நகராட்சியால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வரைபடத்தில், விக்டோரியா மாநிலத்திடமிருந்து உரிமத்தின் கீழ் வழங்கப்பட்ட தரவுகள் உள்ளன. வரைபடத்தில் உள்ள தகவல்கள் இதுவரைக்கும் மிகப்புதியதாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதிசெய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், வரைபடம் முழுமையடையாமல் இருந்தாலோ மற்றும்/அல்லது தவறுகளைக் கொண்டிருந்தாலோ, கேசி நகராட்சியோ அல்லது விக்டோரியா மாநிலமோ பொறுப்பேற்காது. தகுந்த தகுதியுள்ள ஒருவரிடமிருந்து சுயாதீனமான ஆலோசனையைப் பெறாமல், எந்தவொரு நபரும் இந்தத் தகவலை நம்பிச் செயல்படக்கூடாது. கேசி நகராட்சியின் முன் அனுமதியின்றி இந்த வரைபடத்தை மீண்டும் உருவாக்கக்கூடாது.

## Berwick
- 4 Berwick Kindergarten. 30-32 Peel Street, Berwick, 3806
- 7 Brentwood Park Kindergarten. 26 Bemersyde Drive, Berwick, 3806
- 8 Bridgewater Kindergarten. 45 Bridgewater Boulevard, Berwick, 3806
- 18 Gwendoline Kindergarten. 25 Gwendoline Drive, Berwick, 3806
- 31 Mansfield Street Kindergarten. 11 Mansfield Street, Berwick, 3806
- 44 Rossmoyne Kindergarten. 19 Beldale Court, Berwick, 3806
- 49 Timbarra Kindergarten. 20-26 Parkhill Drive, Berwick, 3806

## Botanic Ridge
- 5 Botanic Ridge Family and Community Centre. 10 Echidna Parade, Botanic Ridge, 3977

## Clyde
- 14 Eliston Family and Community Centre. 20 Eliston Ave, Clyde, 3978
- 54 Clyde Township Family and Community Centre. 45 Valetta Street, Clyde, 3978
- 61 Kulap Primary School Kindergarten. 49 Riverland Road Clyde 3978
- 65 Ballarto Road Kindergarten . 51S Riverland Road, Clyde 3978

## Clyde North
- 30 Manna Gum Family and Community Centre. 2-16 Calgary Way, Clyde North,3978
- 40 Ramlegh Family and Community Centre. 80S Thoroughbred Drive, Clyde North,3978
- 45 Selandra Kindergarten. 45 Haflinger Avenue, Clyde North, 3978
- 55 Orana Kindergarten. 18 Playwright Street, Clyde North, 3978
- 60 Topirum Primary School Kindergarten. 20 Manton Road Clyde North 3978
- 64 Balambalam Primary School Kindergarten. 1 Tuition Drive, Clyde North 3978
- 66 Hardy's Road Kindergarten. 51 Sovereign Avenue, Clyde North 3978
- 67 Mirniyan Primary School Kindergarten. 75 Welsummer Drive, Clyde North 3978

## Cranbourne
- 9 Carlisle Park Kindergarten. 2-20 Majestic Boulevard, Cranbourne, 3977
- 11 Clarendon Street Kindergarten. 29-43 Clarendon Street, Cranbourne, 3977
- 41 Rangebank Kindergarten. 40-46 Lesdon Avenue, Cranbourne, 3977
- 63 Bakewell Street Kindergarten. 42-58 Bakewell Street, Cranbourne 3977

## Cranbourne East
- 23 Hunt Club Kindergarten. 40 Broad Oak Drive, Cranbourne East, 3977
- 28 Livingston Kindergarten. 31S Parkhurst Drive, Cranbourne East,3977

## Cranbourne North
- 2 Arbourlea Family and Community Centre. 75 Wheelers Park Drive, Cranbourne North, 3977
- 35 Merinda Park Kindergarten. 149-153 Endeavour Drive, Cranbourne North, 3977
- 53 Woodbine Road Kindergarten. 4 Woodbine Road, Cranbourne North, 3977
- 58 Merinda Park Community Kindergarten. 141-147 Endeavour Drive Cranbourne North
- 62 Kala Primary School Kindergarten. 85 Alisma Blvd, Cranbourne North 3977

## Cranbourne West
- 15 Fairhaven Kindergarten. 42-52 Fairhaven Boulevard, Cranbourne West, 3977
- 34 Mayone Bulluk Kindergarten. 66 Bradman Drive, Cranbourne West, 3977
- 52 Willora Kindergarten. 75-77 Willora Crescent, Cranbourne West, 3977
- 57 Quarters Primary School Kindergarten. 10 Morningside Blvd, Cranbourne West, 3977

## Devon Meadows
- 59 Devon Meadows Primary School Kindergarten. 50 Worthing Road Devon Meadows 3977

## Doveton
- 3 Autumn Place Kindergarten. 29 Autumn Place, Doveton, 3177

## Endeavour Hills
- 1 Allara Kindergarten. 15-17 Gleneagles Drive, Endeavour Hills, 3802
- 10 Chalcot Lodge Kindergarten. 26 Haverstock Hill Close, Endeavour Hills, 3802
- 22 Hartley Ridge Kindergarten. 30-36 Singleton Drive, Endeavour Hills, 3802
- 24 James Cook Kindergarten. 55-63 James Cook Drive, Endeavour Hills, 3802
- 36 Southern Cross Kindergarten. 1-21 David Collins Drive, Endeavour Hills, 3802
- 42 Reema Kindergarten. 42 Reema Boulevard, Endeavour Hills, 3802

## Hallam
- 19 Hallam Gardens Kindergarten. 26-28 Nettle Drive, Hallam, 3803
- 20 ELV Laak - Hallam Kindergarten, 36 Harmer Road, Hallam, 3803

## Hampton Park
- 12 Coral Drive Kindergarten. 187 Coral Drive, Hampton Park, 3976
- 21 Hampton Park East Kindergarten. 16-20 Stuart Avenue, Hampton Park, 3976
- 43 Regans Road Kindergarten. 7 Regans Road, Hampton Park, 3976
- 47 Strong Drive Kindergarten. 101 Strong Drive, Hampton Park, 3976
- 51 Valley Brook Kindergarten. 2 Brook Court, Hampton Park, 3976
- 56 Hampton Park Community Kindergarten. 16-20 Stuart Avenue, Hampton Park, 3976

## Lynbrook
- 29 Lynbrook Kindergarten. 25 River Redgum Place, Lynbrook, 3975

## Lyndhurst
- 33 Marriott Waters Kindergarten. 25 Boland Drive, Lyndhurst, 3975

## Narre Warren
- 16 Fleetwood Kindergarten. 88 Fleetwood Drive, Narre Warren, 3805
- 17 Fountain Gate Kindergarten. 12 Sylvanwood Crescent, Narre Warren, 3805
- 32 Maramba Kindergarten. 2-18 Josephine Avenue, Narre Warren, 3805
- 38 Oatlands Kindergarten. 19-23 Rozzy Parade, Narre Warren, 3805
- 48 Talbingo Kindergarten. 1A Fleetwood Drive, Narre Warren, 3805

## Narre Warren North
- 37 Narre Warren North Kindergarten. 8 Winters Lane, Narre Warren North. 3804

## Narre Warren South
- 25 Jindalee Kindergarten. 20-40 Amberley Park Drive, Narre Warren South, 3805
- 26 Hillsmeade Early Learning Centre. 82 The Promenade, Narre Warren South, VIC, 3805
- 27 Strathaird Kindergarten. 106-108 Strathaird Drive, Narre Warren South, 3805
- 46 Littlecroft Kindergarten. 51 The Strand, Narre Warren South, 3805

## Pearcedale
- 39 Pearcedale Kindergarten. 68 Pearcedale Road, Pearcedale, 3912

## Tooradin
- 50 Tooradin Kindergarten. 102 South Gippsland Highway, Tooradin, 3980

C:\Users\lhill\Casey City Council\Geospatial - GIS Projects\Standard_Map_Request\Kindergarten_Map\20260127_KindergartenLocationsBasemaps.qgz

## கேசி நகராட்சியை தொடர்பு கொள்ளவும்

03 9705 5200
**NRS:** 133 677 (செவித்திறன் குறைபாடு, காது கேளாதோர் அல்லது பேச்சு குறைபாடு உள்ளவர்களுக்காக)
**TIS:** 131 450 (மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை)
caseycc@casey.vic.gov.au
**casey.vic.gov.au**
facebook.com/CityOfCasey
@CityOfCasey
PO Box 1000
Narre Warren VIC 3805

## வாடிக்கையாளர் சேவை மையங்கள்

**Narre Warren**
Bunjil Place
Patrick Northeast Drive

**Cranbourne**
Cranbourne Park
Shopping Centre

City of Casey